

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (13.7.2024) முகாம் அலுவலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதையொட்டி சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (13.7.2024) அவரது இல்லத்தில், மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் அவர்களின் மகன் கோ.ப. அன்பழகன் அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் அ.ஆ.அகத்தியன் – டாக்டர் எஸ்.ஷாலினி ஆகிய புதுமணத் தம்பதியருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (12.7.2024) சென்னையில் நடைபெற்ற எம்.எஸ். ஜாபர் சேட், இ.கா.ப., (ஓய்வு) அவர்களின் மகள் ஹஸ்னா – சிரிஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



செஸ் விளையாட்டில் மிக இளம் வயதிலேயே #FIDE 'Women Candidate Master' பட்டத்தை வென்ற அரியலூர் மாவட்டம் உடையார் பாளையத்தைச் சேர்ந்த சர்வாணிகா இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது உலகளாவிய போட்டிகளில் தடம் பதித்து தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் சர்வாணிகா தொடர்ந்து பெருமை சேர்த்து வெற்றிப் பயணம் தொடர வாழ்த்தினார்.



கோவை மாவட்டம் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோவை கூடலூர் நகரம், வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட சாந்தி மேடு செல்வபுரம், சாமி செட்டிபாளையம், கவுண்டம்பாளையம், நாயக்கனூர், வீரபாண்டி உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் கூடலூர் நகரச் செயலாளரும், நகரமன்ற தலைவருமான அறிவரசு தலைமையில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, வீரபாண்டி நகரச் செயலாளர் சுரேந்திரன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.க. துணை பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா வீதி வீதியாகச் சென்று வாக்களித்த பொதுமக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்த கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், டி.பி.சுப்பிரமணியம், காரமடை கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், சுரேந்திரன், காரமடை நகரச் செயலாளர் வெங்கடேஷ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ரதி மனோகர், கூடலூர் நகர துணைத் தலைவர் ரதி ராஜேந்திரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அந்தோணி ராஜ் உள்ளிட்ட தி.மு.க. நகர மன்ற உறுப்பினர்கள், முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நிலையான வளர்ச்சி இலக்கு குறியீடு: தமிழ்நாடு 2ஆவது இடம்!

புதுடெல்லி, ஜூலை 14-

2023-24ஆம் ஆண்டுக்கான நீதி ஆயோக்கின் நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டில் தமிழ்நாடு 2ஆவது இடம் பிடித்துள்ளது.

சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முன்னேற்றத்தை நீதி ஆயோக்கின் நிலையான வளர்ச்சி இலக்கு குறியீடு மதிப்பிடுகிறது.

இந்நிலையில், 2023 - 2024ஆம் ஆண்டுக்கான நீதி ஆயோக்கின் நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டில் இந்தியா ஒட்டுமொத்தமாக 71 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 2020 - 21ஆம் ஆண்டுக்கான அந்தக் குறியீட்டில் இந்தியா 66 புள்ளிகளைப் பெற்ற நிலையில், தற்போது முன்னேற்றம் அடைந்துள்ளது.

வறுமை ஒழிப்பு, கண்ணியமான வேலை, பொருளாதார வளர்ச்சி உள்ளிட்டவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தால், தற்போதைய குறியீட்டில் இந்தியாவின் புள்ளிகள் அதிகரித்துள்ளது.

மாநிலங்களைப் குறியீட்டில் கேரளம் மற்றும் உத்தரகண்ட் தலா 79 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளன. 78 புள்ளிகளுடன் தமிழ்நாடு 2ஆவது இடத்தையும், 77 புள்ளிகளுடன் கோவா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

நாகாலாந்து 63 புள்ளிகளுடனும், ஜார்க்கண்ட் 62 புள்ளிகளுடனும், பீகார் 57 புள்ளிகளுடனும் மிகவும் பின்தங்கிய மாநிலங்களாக உள்ளன.

இந்தக் குறியீட்டில் யூனியன் பிரதேசங்களை பொருத்தவரை சண்டீகர், ஜம்முகாஷ்மீர், புதுச்சேரி, அந்தமான்நிகோபார் தீவுகள், டெல்லி ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

## தமிழ்நாட்டில்

# சட்டம் - ஒழுங்கைச் சீர்குலைக்க சில கட்சிகள் சதி!

## வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. பேட்டி!

சென்னை, ஜூலை 14 -

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை சீர் குலைக்க சில அரசியல் கட்சிகள், அமைப்புகள் சதி செய்கின்றன என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்த பின்னர் திருமாவளவன் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் சென்னை தலைமைச் செயலகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருமாவளவன் சந்தித்து பேசினார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சந்திப்புக்கு பின் திருமாவளவன் அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கை கெடுத்து பிரச்சினைகளை உருவாக்க சில அரசியல் கட்சிகள், அமைப்புகள் சதி செய்கின்றன. பகுஜன் சமாஜ் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலையிலும் அரசியல் சதி இருப்பதாக வி.சி.க. கட்சி சந்தேகிக்கிறது.

ஆம்ஸ்ட்ராங் பலியான சில நிமிடங்களிலேயே பா.ஜ.வைச் சேர்ந்த ஒருவர் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என பேட்டி தருகிறார். எடுத்த எடுப்பிலேயே தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள போலீஸ் விசாரிக்க கூடாது என கூறியது ஏன்?

ஆருத்ரா கோல்டு மோசடி யில் ஈடுபட்டவர்கள் பா.ஜ.க.வில் பொறுப்பில் உள்ளார்கள் என ஒரு வருடத்திற்கு மேல் பேசப்பட்டு வருகிறது.

ஆருத்ரா மோசடியில் தொடர்புடையவர்கள் தான் ஆம்ஸ்ட்ராங் கொலையிலும் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஆம்ஸ்ட்ராங் கொலையை சி.பி.ஐ. விசாரிக்க பா.ஜ.க. கூறு கிறது.

கலைஞர் குறித்து கொச்சையாக விமர்சித்து சட்டம் - ஒழுங்கை சீர்குலைக்க சதி செய்கின்றனர்.

நீட் தேர்வு முறைகேடு உறுதிபடுத்தப்பட்டுள்ள நிலையில் அதை மறைக்க பா.ஜ.க. முயற்சித்து வருகிறது.

நீட் தேர்வு தொடர்பாக சரியான நிலைப்பாட்டை முதன்முதலில் எடுத்தது தமிழ்நாடுதான். இதை இன்று ஒட்டுமொத்த இந்தியாவும் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்நிலையில் இப்போது முடிவு அறிவிக்கப்பட்ட தேர்வை மட்டுமின்றி, ஒட்டுமொத்தமாக நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். நீட்டிலிருந்து தமிழ்நாடு உள்பட விரும்பும் மாநிலங்களுக்கு விலக்களிக்க வேண்டும். இதற்கான அரசியல் ரீதியான அழுத்தத்தை கொடுத்தாக வேண்டும்.

நீட் தேர்வு தொடர்பான விசாரணை உச்சநீதி மன்றத்தில் வருகிற 18ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் அனைத்துக்கட்சி கூட்டம் ஒன்றை கூட்டி அதில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கும், உச்சநீதிமன்றத்துக்கும் அளிக்க வேண்டும்.

இவ்வாறு தொல். திருமாவளவன் எம்.பி. பேட்டியளித்தார்.

